மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ

சென்னை நகர சபையில் நமது நிதியமைச்சர் — முனுசாமி

மாலைமணி
ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 2 9—10—60 ஒலி 49

நைஜீரியா பற்றவைத்த பெரு நெருப்பு !

★

காலமெல்லாம் ஆங்கிலேயனுக்கு அடிமைப் பட்டுக் கிடந்த ஆப்பிரிக்கா கண்டத்து நைஜீரியா, இன்று தனது விடுதலைக் கொடியை உயரப் பறக்கவிட்டு வெற்றிக் களிப்பில் மூழ்கிக் கிடக்கிறது! உலகப் பெருந் தலைவர்களின் பெருமைக்குரிய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் பெற்று பெரும் பூரிப்பில் திளைத்து நிற்கிறது!

நீண்ட நெடுநாட்கள் வரையில், அதே ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த பரத கண்டத்தின் தலைவர் பண்டித ஜவகர்லால் நேருவும் வாழ்த்துச்செய்தி அனுப்பி மகிழ்ந்திருக்கிறார்!

"இந்த விடுதலை நாள், நைஜீரியாவுக்கு மட்டுமல்ல; உலகத்திற்கு ஒரு நன்னாள்! ஆப்பிரிக்கா கண்டத்தில் விடுதலை பெற்ற நாடுகள் தோன்றுவதைப்போல உலகத்தில் அதிசயமான நிகழ்ச்சி எதுவுமில்லை! அந்தக் கண்டம் முழுவதும் ஒரு சுழற்சியில் அமுங்கிக் கிடக்கிறது! அதன் நாடி நரம்புகளில் புது வாழ்வு என்னும் ரத்தம் பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறது! புதுப் பிரச்னைகளைச் சந்திக்கவும் காத்துக்கொண்டிருக்கின்றன! துன்பம் தொடர்வதற்கும் தயாராய் இருக்கிறது! ஆனால் அழியாத புதிய தீப்பொறி ஆப்பிரிக்காவிலே தோன்றிவிட்டது. அது உலக கவனத்தைத் தன் பக்கம் கட்டளையிட்டுத் திருப்புகிறது! இந்தியத் துணைக் கண்டத்து மக்கள்—நம் எல்லோரையுமே எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கும் இந்தப் புதிய சக்தியை வரவேற்கின்றனர்!"

பரத கண்டத்துத் தலைவர், விடுதலை பெற்ற நைஜீரியாவுக்கு அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்திதான் அது. இதை வாழ்த்துச் செய்தி என்பதைவிட "அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டவர்களின் உள்ளங்களிலே மூட்டிவிட்ட உணர்ச்சித் தீ, கோழைகளின் உள்ளங்களிலே பற்றவைத்த பெரு நெருப்பு" என்றுதான் சொல்ல வேண்டும்!

அந்தப் பெரு நெருப்பு—பண்டித ஜவகர்லால் நேரு கூறுவதுபோல்—உலகக் கவனத்தையெல்லாம் தன் பக்கம் கட்டளையிட்டுத் திருப்புகிறது! இந்த உலகம் மட்டுமல்ல; இந்த உலகத்தைச் சார்ந்த, இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் அனைவரையுமே எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இந்தப் புதிய சக்தியை வரவேற்கின்றனர்! "அது மட்டுமல்ல; இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் தென்னாட்டு மக்களும் தங்கள் உயிர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அற்புத, அதிசய நிகழ்ச்சியை வரவேற்கின்றனர்" என்ற உண்மையையும் நேரு பெருமகனார் உணர வேண்டும்! உணர்வார் என்பதில் எங்களுக்குத் துளியும் சந்தேகமேற்படவில்லை! காரணம் அவர், "ஊருக்கு மட்டு' உபதேசியல்ல, தனக்கும் உபதேசியாக இருப்பார்" என்பதால்தான் இதனைத் திடமாகக் கூறுகிறோம்!

பண்டித ஜவகர்லால் நேரு, மற்றவர்களைப்போல் உலகமறியாதவரல்ல! மற்றவர்களைப்போல், ஒடிவரும் புதுமையை, அதன் வலிமையை அறியாதவருமல்ல! தன்னுடைய நாடும் ஒரு காலத்தில் அடிமைத் தளையில் தான் சிக்குண்டு கிடந்தது என்பதையும், அந்த அடிமைத்தனம், எத்தனை அறியாமையை, எத்தனை வேதனையை, எத்தனை வெறுப்பை உண்டாக்கிற்று என்பதையும் அவர் அறிவார்!

இதை அறிந்த காரணத்தால்தான் விடுதலை பெற்ற நைஜீரியாவை வாழ்த்தி—அதேபோல் அடிமைப்பட்ட நாடுகளும் கொந்தளித்து எழவேண்டும் என்றும் கூறி இருக்கிறார்!

பண்டித ஜவகர்லால் நேரு உண்மையிலேயே ஒரு நல்லவர், நல்ல உள்ளம் படைத்தவர் என்பதைத் தான் இது எடுத்துக்காட்டுகிறது! இந்த புண்ணிய பூமியாம் பரத கண்டத்தில் இல்லாத நேரத்தில் அவர் மிக்க உணர்ச்சியோடும், காலப் போக்கை அறிந்து, நாட்டு நடப்பை உணர்ந்து, உலகப் பெரு நிகழ்ச்சிகளைக் கவனித்துப் பேசுகிறார்! இந்த புண்ணிய பூமிக்குத் திரும்பி விட்டால் எல்லாவற்றையுமே மறந்துவிடுகிறார்! இதற்கு என்ன காரணம் என்பதை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை! இங்குள்ள சூழ்நிலையா? பழக்க வழக்க தோஷமா? அல்லது தன ஆதிக்கம் அழிந்துவிடும் என்ற நினைப்பா?

நைஜீரியாவை வாழ்த்துபவர், நைஜீரியாவின் உணர்ச்சியைப் பாராட்டுபவர், நைஜீரியாவின் விடுதலையைக் கண்டு பூரிப்பவர் இந்த நாட்டில்—தன் சொந்த நாட்டில் ஏற்படும் விடுதலை உணர்ச்சிகளுக்கு மட்டும் மதிப்பளிக்காத காரணம் என்ன?

ஒரு நாட்டை, ஒரு நாடு அடிமைப்படுத்துவது முட்டாள்தனம், ஒரு நாட்டின் உணர்ச்சியை, ஒரு நாட்டார் அடக்க நினைப்பது அறியாமை என்றெல்லாம் பேசும் பண்டிதருக்கு சொந்த விவகாரம் வந்தால் சோர்ந்து உட்காருவது ஏன்?

நைஜீரியா எப்படியோ அப்படித்தான் திராவிடமும்! நைஜீரியா ஆப்பிரிக்காக் கண்டத்திலிருக்கிறது-திராவிடம இந்தியத் துணைக் கண்டத்திலிருக்கிறது! அதை ஆங்கிலேயன் அடிமைப்படுத்தி வைத்திருந்தான்—இதை நீங்கள் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்! அந்த நாட்டு விடுதலையை வரவேற்கிறீர்கள், வாழ்த்துகிறீர்கள்! இந்த நாட்டு விடுதலைக்குத் தடை போடுகிறீர்கள! இது எந்த விதத்தில் நியாயமாகும்?

ஆப்பிரிக்கக் கண்டத்தில் விடுதலை நாடுகள் தோன்றுவது—அதிசயம், அற்புதம், ஆச்சரியம்—இதைப் போல் அதிசயம் உலகத்தில் வேறொன்றுமில்லை என்றெல்லாம் வருணிக்கிறீர்கள்!

இங்கு மட்டும் இது அதிசயமாக இல்லையா? இது அற்புதமாக இல்லையா?

பண்டித ஜவகர்லால் நேரு உலகப் பெருந்தலைவர்களிடம் 'சபாஷ்" பெறவேண்டும் என்பதற்காக, உலகப் பெருந்தலைவர்களின் பாராட்டை, புகழை, நன்மதிப்பைப் பெறவேண்டும் என்பதற்காக இப்படிப் பேசுவது முற்றிலும் சரியில்லை!

உங்கள் அடிமைத் தளையில் ஒரு நாடு சிக்குண்டு கிடக்கிறது! அந்த நாடும், நீங்கள் வாழ்த்திய நைஜீரியாவைப் போன்ற ஒரு நாடுதான்! அதற்குப் பெயர் நைஜீரியா—இதற்குப் பெயர் திராவிடம்!

உங்கள் அடிமைத் தளையில் சிக்குண்டுத் தவிக்கும் திராவிடம் விடுதலை கீதம் பாடுகிறது! அடிமைத் தளையை உடைக்க வீறு கொண்டு நிற்கிறது! வளமிழந்து கிடக்கும் நாட்டைக் கண்டு திராவிடத்து மக்கள் மனம் கொதித்து நிற்கிறார்கள்! வறுமையால் வாடிடும் நாட்டைக் கண்டு திராவிடத்து மக்கள் எரிமலையாகி விட்டனர். "விடுதலை, விடுதலை" என்ற முழக்கத்தைக் கிளம்பியவண்ணம் அடிமைத்தளையை உடைத்து நொறுக்கப் புறப்பட்டு விட்டனர்!

(5ம் பக்கம் பார்க்க)

ஆதிக்கத்தையோ, அதிகாரத்தையோ பெற திராவிட நாடு கேட்கவில்லை!

நேருவிற்குப் பதில் அண்ணா பதவியிலிருக்க வேண்டுமென்பதல்ல நமது ஆசை!

பிறந்த பொன்னாடு - தாய்த் திருநாடு விடுதலை பெறவேண்டுமென்பதே நமது இலட்சியம்!

சைதையில் கருணாநிதி இலட்சிய முழக்கம்

சைதை 98-வது வட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 2-10-60ம் நாள் மாலை 6 மணிக்கு திரு. தி. மு திருநாவுக்கரசு தலைமையில் "திராவிடநாடு விடுதலை வார" கொண்டாட்டம் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் பலர் இயக்கப் பாடல்களை முழக்கினர்.

தோழர்கள் குமார், சைதை பவளவண்ணன், நகர மன்ற உறுப்பினர் திரு குமாரசாமி சம்பந்தம் முதலியவர்கள் திராவிடநாட்டுப் பிரிவினையைப் பற்றியும், காங்கிரஸ்காரர்கள் கழகத்தின் மீது செய்து வரும்பொய் பிரசாரங்களைப் பற்றியும் மிக விளக்கமாகப் பேசினார்கள்.

நகர மன்ற உறுப்பினர் திரு. குமாரசாமி அவர்கட்கு தமது நண்பர்களால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட கைக்கடிகாரத்தை கலைஞர் கருணாநிதி அவர்களால் தோழர் குமாரசாமிக்கு அணிவிக்கப்பட்டது. மற்றும் இரு தோழர்களால் முன்னேற்றக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்ட இரண்டு இருப்பு நாற்காலிகளையும் கலைஞர் அவர்கள் செயலாளரிடம் கொடுத்தார்.

பின்னர் பலத்த கைதட்டல்களுக்கிடையேயும், மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையேயும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருள் காப்பாளரும் இயக்கத்தின் பெரும் தலைவர்களில் ஒருவரும், சட்டமன்ற உறுப்பினருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் பேச எழுந்ததும் பல பாகங்களிலிருந்து வேட்டுகள் முழங்கின.

பல மன்றங்கள் சார்பிலும், சுற்றுப் பக்கங்களிலுள்ள இலைக் கழகங்கள் சார்பிலும் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும், அணிவிக்கப்பட்டன. கலைஞர் அவர்கள் உணர்ச்சியும், கருத்து விளக்கமும் நிறைந்த நீண்ட கொள்கை முழக்கம் செய்தார் அது வருமாறு:—

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!



இன்று இங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெறும் விடுதலை வார விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்காகப் பெரிதும் மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தோழர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைக் கூறிக் கொள்கிறேன்.

சென்றவாரம் இங்கு நான் பேசுவதற்கு வந்திருந்தேன்; ஆனால் எனது சொற்பொழிவை கேட்க முடியாதபடி மழைவந்து தடுத்து விட்டது.

நான் அதிக நேரம் பேச முடியவில்லை. இன்று நீங்களெல்லாம் முன்னெச்சரிக்கையுடனேயே குடைகளைக் கொண்டு வந்திருக்கிறீர்களென எண்ணுகிறேன்.

குடைகள் கொண்டு வந்திருப்பவர்கள் இப்போதே விரித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை மடக்கி வைத்துக்கொள்வது நல்லது, மழை அதிகம் வரும்போது விரித்து வைத்துக் கொள்ளுங்கள். குடை இல்லாதவர்களையும் குடை வைத்துள்ளவர்கள் சேர்த்துக் கொள்ளவேண்டும், ஒரு குடையின் கீழ் 3 பேர்களைச் சேர்த்துக்கொண்டு நான்கு பேர்களாக இருக்கச் செய்யுங்கள்! திராவிடநாடு பிரிந்தால் ஒரே குடையின் கீழ் ஆந்திரம், தமிழகம், கேரளம், கர்னாடகம் ஒன்றாக இருக்கும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும்:

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று சீரோடும், சிறப்போடும், பொலிவோடும் வலிவோடும் மக்களின் அன்பைப் பெற்று வளர்ந்துவந்திருக்கிறது. அது பலவித இன்னல்களுக்கிடையேயும், பலவித கொடுமைகளுக்கிடையேயும் வளர்ந்திருக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்துள்ள வளர்ச்சியைக்

(4ம் பக்கம் பார்க்க)

பத்திரிகையில் பொய் எழுதி நம்மை அழிக்க காங்கிரஸ் புது முயற்சி

இந்த முயற்சி அவர்களையே அழிக்கும்!

திருவோடு ஏந்தும், காவடி தூக்கும் நிலையை மாற்றுவதே கழகத்தின் முக்கிய கொள்கை

(முன் பக்கத் தொடர்ச்சி)

கண்டு பொருமையும், பொச்சரிப்பும், வயிற்றெரிச்சலும் கொண்டு அதை அழித்து ஒழிக்க மாற்றார் முயற்சி செய்து வருகிறார்கள்,

காங்கிரஸ் கட்சியின் பெருந் தலைவர்களிலிருந்து சில்லறைகள் வரை, காங்கிரஸ் அமைச்சர்களிலிருந்து, அரசியல் அப்பாவிகள் வரை கழகத்தையும், அதன் செல்வாக்கையும் அழித்துவிட அவர்கள் செய்துவரும் காரியங்களை நாம் கண்முன் பார்த்துத்தான் வருகிறோம்.

இன்று நாட்டில் கழகக் கூட்டங்களுக்கு மக்கள் வந்து கூடுவதைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் வயிற்றெரிச்சல்பட்டு, அதைத் தாக்குகிறார்கள்.

எவ்வளவு பெரிய மழைபெய்தாலும் அதைப் பொருடபடுத்தாது, மழையில் நனைந்துகொண்டே கழகக் கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் கூடுகிறார்கள். அதுவும் என்னைப் போன்ற சாதாரணமானவன் பேசினாலே மக்கள் பெருந்திரளாகக் கூடுகிறார்கள். ஆனால், காங்கிரசில் பெருந் தலைவர்கள், பெருமைக்குரியவர்கள், அமைச்சர்கள் என்பவர்கள் பேசும் கூட்டத்திற்கு எண்ணிவிடும்படியான மக்கள் தான் வருகிறார்கள். 200 பேர்களுக்கு மேல் அங்கு மக்களைக் காண முடியாது. அதுவும் நமது நாவலர் அவர்கள் கூறுவது போன்று 150 பேர்கள் போலீஸ்காரர்களாக இருப்பார்கள். இந்த நிலையைப் பார்க்கும்போதுதான் காங்கிரஸ்காரர்களுக்கு அமைச்சர்களுக்கு நம்மீது கோபம் ஏற்படுகிறது, நம்மைத் தாக்குகிறார்கள்.

இன்று நமது மாநில அமைச்சர்களில் பலர் நம்மைப்பற்றி தவறான முறையில் பேசி வருகிறார்கள், "திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மேடைகளில் ஆபாசமாக—தாறுமாறாகப் பேசுகிறார்கள்" என்று தப்பாக மக்கள் மனதில் நம்மை இழிவாக நினைக்கச் செய்யவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் பேசி வருகிறார்கள்,

கடந்த இரண்டு மூன்று தினங்களுக்கு முன் பொன்னேரியில் நமது மாநிலத்தின் உள்துறை அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஆபாசமாகப் பேசுகிறார்கள்" என்று பேசியிருப்பதாகப் பத்திரிகையில பார்த்தேன், அதை நான் நம்பவில்லை. அதுவும் அமைச்சர் பக்தவத்சலமா பேசியிருப்பார் என்று நினைத்தேன்.

சட்டமன்றத்தில் நமது அண்ணா அவர்கள் பேச்சை நமது அன்பழகன் பேச்சை, ஆசைத்தம்பி பேச்சை, 15 சட்டமன்ற உறுப்பினர்கள் பேச்சைக் கேட்டிருக்கிறாரே. நம்மை அடிக்கடி சந்திக்கிறாரே. நமது தலைவர் பேச்சைக் கேட்டிருக்கிறாரே. அப்படிப்பட்ட அமைச்சர் பக்தவத்சலமா இப்படி பேசி இருப்பார் என்று சந்தேகப் பட்டேன். யாராவது நம்மீதுகோள் சொல்லியிருப்பார்களோ என்று எண்ணினேன்.

சென்றவாரம் நமது அண்ணா அவர்கள் கடற்கரையில் பேசும்போது "எனது எழுச்சியின் உருவாக எனது தம்பிகளில ஒருவனைக் காண்கிறேன். எனது கனிவு உருவாக ஒரு தம்பியைக் காண்கிறேன் எனது தமிழையே இன்னொரு தம்பியிடம் காண்கிறேன், கைச்சுவை மூலமாக ஒரு தம்பியைக காண்கிறேன்" என்று குறிப்பிட்டதை அமைச்சரிடம் கூறி இருப்பவர்கள் நம்மிடமுள்ள பாசத்தை—கட்டுப்பாட்டை ஒற்றுமையை சொல்லி இருப்பார்கள் அதை அமைச்சர் பக்தவத்சலம் கேட்டிருப்பார். உடனே ஆச்சரியத்துடன் 'ஆ'! என்று ஒரு இழுப்பு இழுத்து பாசம் என்று சொல்லியிருப்பார் அதைக்கேட்டு பத்திரிகைகளில் ஆபாசம் என்று போட்டிருப்பார்களோ என்றும் நினைத்தேன், ஆனால் நான் நினைத்தது தவறு என்பதை அங்கிருந்து வந்த நண்பர்கள் கூறிவிட்டார்கள்.

நான்பொறுப்பை உணர்ந்தும், அமைச்சருக்கு மதிப்புத்தருவதற்காவுமே அவ்வாறு நினைத்தேன் ஆனால் அமைச்சர் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

கண்ணியமற்ற முறையில், பண்பற்ற முறையில் ஆபாசமாக கேவலமாக வெட்கித் தலைகுனியும் வகையில் பேசியிருக்கிறார் அதுவும் "கண்ணியத்தில் தலைசிறந்தவரும்" "நாவடக்கத்தில் நற்பெயர் பெற்றவரும்" தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவருமான திரு. ஓ. வி அழகேசன் அவர்களை அருகில் வைத்து அமைச்சர் பக்தவத்சலம் பேசியிருக்கிறார் அமைச்சரின் பேச்சைக் கேட்டு அழகேசனாரே வெட்கித் தலை குனிந்திருக்க வேண்டும். ஏனெனில் அவரை முந்திவிட்டார், இவர் அமைச்சர் பக்தவத்சலத்திற்கு ஏன் இந்த ஆவேசம் பிறந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை

இன்று காங்கிரஸ் தலைவர்களும், அமைச்சர்களும் முன்னேற்றக் கழகத்தை அழிக்கவும், அதன் செல்வாக்கைக் குறைக்கவும் செய்துவரும் விஷமங்கள் பல · அவைகளை இப்போது காங்கிரஸ் தினசரிகள் வேண்டுமென்றே தவறான செய்திகளை வெளியிட்டு மக்கள் மனதைக் குழப்பும் வேலைகளில் ஈடுபட்டு

(9ம் பக்கம் பார்க்க)

டார்பிடோ வருகை!

சிறந்த பேச்சு வன்மையால் டார்பிடோ என்னும் பட்டத்தைப் பெற்று, நல்ல பண்பாலும், சிறந்த குணத்தாலும், அப்பழுக்கில்லாத அரசியல் பணியினாலும் தமிழகத்தின் இதயங்களையெல்லாம் கவர்ந்துவிட்ட **தோழர் ஏ. பி. ஜனார்த்தனம்**, எம். ஏ. அவர்கள் திராவிடர் கழகத்தின் போக்குப் பிடிக்காத காரணத்தால், நீண்ட நாட்களின் சிந்தனைக்குப் பிறகு திராவிடர் கழகத்திலிருந்து விலகி நம்முடைய பாசறைக்கு வந்திருக்கிறார்! அவரை வரவேற்கிறோம்!

குடத்திலிட்ட விளக்காய், குப்பையில் கிடந்த மாணிக்கமாய்—ஆற்றலைக் காட்ட வழியின்றி, திறமைக் கேற்ற பணி புரிய வழியின்றி, பொச்சரிப்பு, பொருமை என்னும் பேய்களுக்கு பலியாகி, அதனால் மனம் புழுங்கி, வேதனைப்பட்டுக் கொண்டிருந்த நண்பர் ஜனார்த்தனம் அவர்கள் மனதைத் திடப்படுத்திக்கொண்டு மக்கள் பணிபுரிய மக்கள் இயக்கத்தில் சேர்ந்துவிட்டார்!

உற்றார் உறவினர்களைப்போல், பெற்ற தாய் தந்தையர்களைப்போல், உற்ற சகோதரர்களைப் போல் ஒன்றாய் வாழ்ந்து—இடையிலே கொஞ்சம் விலகி நின்ற ஜனார்த்தனம் அவர்கள் வருகிறார்—அவரோடு பாசம் கொள்வோம், நேசம் கொள்வோம், அவருடைய ஆற்றலையும் நாட்டுப் பணிக்குப் பயன்படுத்திக்கொள்வோம்!

ஏலம் போகவிருந்த

கலைவாணர் இல்லத்தை புரட்சி நடிகர் மீட்டார்!

டி. கே. எஸ். சகோதரரின் முதல்வர் ஏலத் தொகையை உயர்த்திய கேவலப் போக்கு!

எம். ஜி. ஆரின் பெருந்தன்மையை மக்கள் போற்றுகின்றனர்!

கலை உலகிற்கும், கலைஞர்களுக்கும் நல்வாழ்வும், நல்ல புகழும் தேடித்தந்தவரும், தனது திறமையால ஈட்டிய பொருள்களையெல்லாம் நாட்டு மக்களுக்கு அள்ளிக் கொடுத்த அந்தக் கொடை வள்ளல் காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் சொந்த இல்லம் ஏலத்திற்கு வருகிறது என்று கேள்விப்பட்டதும் தமிழகத்து மக்களும், கலைஞர்களும் ஆற்றொணாத் துயரமடைந்தார்கள்.

கலைவாணர் ஒரு சிறந்த நடிகராக மட்டும் இருக்கவில்லை. அவர் நடிப்பின் மூலம் மக்களின் நல்வாழ்விற்காக அரும்பாடுபட்டு வந்தவர்; அவர் பசி என்று வந்தவர்களுக்கெல்லாம் — துயரமென்று வந்தவர்களுக்கெல்லாம் ஆதரவு தந்து அள்ளிக் கொடுத்தவர், அப்படிப்பட்ட உத்தமரின் இல்லம் ஏலம் போவதைத் தடுக்க வேண்டும், அவரது இல்லம் கலைவாணரின் நினைவு மண்டபமாக இருக்கவேண்டுமென்று பல கலைஞர்கள் எண்ணினார்கள்.

வருமான வரி இலாகாவினரால் நாகர் கோவிலிலுள்ள கலைவாணருக்குச் சொந்தமான "மதுர பவனம்" ஏலத்திற்கு விடப் போகிறார்கள் என்பதை இன்றைய பாரி வள்ளலும், தென்னகத்து மக்களின் உள்ளத்திலெல்லாம் குடி கொண்டிருப்பவரும், மறைந்த நகைச்சுவை மன்னரின் வாரிசுமான புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் கேள்விப்பட்டார்-ஏங்கினார். துடித்தார்.

உடனே தனது அலுவலக நிர்வாகி திரு எஸ். கே. சாமியை நாகர் கோவிக்குப் பணத்துடன் அனுப்பினர். கலைவாணரின் இல்லம் ஏலத்திற்கு வேறொருவர் எடுத்து அதனால் கலைவாணர் குடும்பம் துயரத்தில் மூழ்கக்கூடாதென்று! அப்படிச் செய்யாவிட்டால் இன்றுள்ள கலைஞர்களுக்கெல்லாம் இழுக்கு உண்டாகும். மக்களெல்லாம் கலைஞர்களை இகழ்வார்கள். மற்றும் கலைவாணருக்குத் துரோகம் செய்தவர்களாவார்கள் என்று எண்ணியே புரட்சிநடிகர் தனது சொந்தப் பணத்தைக் கொடுத்து திரு. சாமியை நாகர் கோவிலுக்கு அனுப்பினர்.

கலைவாணரின் இல்லத்தை ஏலத்திற்கு எடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை. ஆனால் டி. கே. எஸ். சகோதரர்களின் மூத்தவரான திரு. டி.கே. சங்கரன் அவர்களும், திருராமையா பிள்ளை என்பவரும் ஏலம் எடுக்க முன்வந்தார்கள்.

புரட்சி நடிகரின் நிர்வாகி திரு. சாமி அவர்கள் என். எஸ். கே. யின் இல்லம் அவரது குடும்பத்திற்கே இருக்கும் நோக்கத்தோடு வந்திருப்பதை உணர்ந்த திரு. ராமையா பிள்ளை, ஏலம் எடுப்திலிருந்து விலகிக் கொண்டார். திரு. டி. கே. சங்கரன் மட்டும் தடைசிவரை ஏலம் கேட்டதுடன், தொகையை உயர்த்திக்கொண்டே வந்தார்.

ஆனல் புரட்சி நடிகரின் தூதுவர் சாமி, அதற்கு இடம் கொடுக்காது அந்த வீட்டை வேறொருவர் கைக்குப் போகவிடாது தானே ஏலத்திற்கு எடுத்தார்.

இந்த வீட்டில் இருந்து அனுபவிக்கும் உரிமை என். எஸ். கே. குடும்பத்திற்கே இருக்க வேண்டுமேயல்லாது, வேறு யாருக்கும் இருக்கக் கூடாதென்று புரட்சிநடிகர் எண்ணினர் அதை அவர் நிர்வாகி நிறைவேற்றினர்.

இதைத் தென்னகத்து மக்கள் எல்லாம் கேள்விப்பட்டு ஆனந்தம் கொள்கிறார்கள். புரட்சி நடிகரின் பெருந்தன்மையை மிகவும் பாராட்டுகிறார்கள்.

நாகர் கோவில் பகுதியில் வாழும் மக்களெல்லாம் புரட்சி நடிகரைப் பாராட்டிப் புகழ்கிறார்கள். அதே நேரத்தில் கலைவாணரைப்பற்றி நன்கறிந்த டி. கே. சங்கரன் (டி. கே. எஸ். சகோதரர்களின் மூத்தவர்) ஏலம்எடுக்க வந்ததை வெறுப்பதுடன், அது மிகவும் இழிவானது என்றும் பேசிக் கொள்கிறார்கள். ●

இங்கல்ல! சைப்ரசில்!

குடியரசுத் தலைவர் சம்பளத்தைத் துறந்தார்!

★★★

சைப்ரஸ் தீவின் குடியரசுத் தலைவராக இருக்கும் ஆர்ச் பிஷப் மகாரியஸ் தமக்கு ஆண்டுச்சம்பளமாக அளிக்கப்படும் 5 ஆயிரம் பவுன்களையும் இனி பெற்றுக்கொள்ளமாட்டேன் என பத்திரிகையாளர் மாநாட்டிலே அறிவித்துவிட்டார். "எனது அரசியல் தொண்டுக்கு நான் ஊதியம் பெற விரும்பவில்லை! எனது ஊதியம் இனி சைப்ரசின் வளர்ச்சிக்கு சிறிதளவாவது உதவட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். ராமராஜ்பம் காண விழையும் பஞ்ச(ம்)சீல உபதேசிகள் நிறைந்த பாரதம் மகாரியசின் வழியைப் பின்பற்றுமா? சம்பளமாக வாங்கிக் கொள்ளும் பல லட்சம் 'சுபீட்ச இந்தியா' காண உதவுமா? ஏழைகள் வாழ்வே தன்வாழ்வெனக் கூறிய மகாத்மாவின் சீடர்கள் நாங்கள் என்று தம்பட்டமடிப்பவர்கள் மகாரியஸ் பாதையில் நடப்பார்களா?

(தலையங்கம் தொடர்ச்சி)

இதற்கு உங்களுடைய பதிலென்ன? உங்களுடைய செயலென்ன? அடக்குமுறைகள் தானா? வெடிக்கும் துப்பாக்கிக் குண்டுகள்தானா? தடியடியும், சிறைவாசமும்தானா? என்ன பதில்? அது உடனடியாகத் தேவை!

விடுதலை பெற்ற நைஜீரியாவை வாழ்த்திய காரணத்தால், "அது பெரு நெருப்பு, உலகக் கவனத்தையெல்லாம் இழுக்கும் நிகழ்ச்சி, இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் பிரச்சினைகளையும் தீர்க்கும் புதிய சக்தி" என்று பெருமையோடு கூறிய காரணத்தால் இதனைக் கேட்கிறோம்!

நல்ல பதில் கிடைக்காவிட்டால் நைஜீரியா பற்ற வைத்த பெரு நெருப்பு திராவிடத்தையும்பற்றிப் பிடித் தெரியும் என்ற பேருண்மையைத் தங்களுக்கே சமர்ப்பிக்கிறோம்!

நைஜீரியா மூட்டிய விடுதலைத் தீ எப்படி ஆங்கில ஆதிக்கதனைதப்பற்றி அதைச சாம்பலாக்கிற்றோ, அதே போல் திராவிடத்தில் மூண்டுவிட்ட பெரு நெருப்பும் இந்த நாட்டின் ஆதிக்க சக்தியை வெந்து சாம்பலாக்கித் தணிக்கும்!

அந்தக் காலத்தில் வாழ்த்துவதைவிட இந்தக் காலத்திலேயே வாழ்த்தி நாட்டுக்கு விடுதலையை வழங்குவது உங்களுக்கும் பெருமை, உங்களைப் பாராட்டிடும் உலகப் பெருந் தலைவர்களுக்கும் பெருமையாகும்! பண்டிதரின் பதிலை மிக்க ஆவலோடு எதிர்ப்பார்த்துக் கொண்டும் இருக்கிறோம்! ★

21

வானத்தின் கூரையை தொட்டு முத்தமிட்டு ஆலிங்கனம் செய்து கொண்டிருந்த கண்கவர் கட்டிடங்கள், நீண்டு விரிந்து கிடந்த பளிங்குச்சாலைகள், அந்தச் சாலை வழியே கண்ணை மின்னிப் பறக்கும் ஆப்பிள் நிற மாதர்கள், தன் கருத்துக்கிசைந்த கனவான்களோடு கொஞ்சிச் செல்லும் காட்சிகள், அந்தக் கொஞ்சும் குரலைக் கேட்க ஏங்கித் தவிக்கும் இளம் உள்ளங்கள், அந்த இளம் உள்ளங்களை க்கணநேரத்தில் அணைத்துச் செல்லும் பிஞ்சு உள்ளங்களின் ஒய்யாரம் எல்லாம் ராஜனுக்குப் புதுமையாகவும், கொஞ்சம் புரட்சியாகவும் தோனறின! இது தான் இந்த நாட்டிற்கு நாகரீகம்போலும் என எண்ணினான்!

நான்குவீதிசந்திப்பிலேநின்று, இந்த கண்கொள்ளாக் காட்சியைக கண்டு ரசித்துக் கொண்டிருந்தான்! குதிரை போன்ற குளம்படிச் சப்தமும், நிமிர்ந்த நோக்கும், கம்பீர நடையும், இந்த நாட்டுப் பெண்களின் வீரத்திற்கும், துணிவுக்கும் இது எடுத்துக் காட்டு போலும் என எண்ணினான்! பட்டிக் காட்டானைப்போல் அந்தக் காட்சியைக் கொஞ்சம் முறைத்துப் பார்த்தே ரசித்துக் கொண்டிருந்தான்! ரசித்தவன் ரசித்தபடியே இல்லை! கொஞ்சம் அனுபவிக்கவும் ஆசைப்பட்டான் போலும்! குயில்போன்ற கீச்சுக் குரலின் நாதம், அவனுடைய இதயத்திலே ஒரு பேதத்தை உண்டாக்கிற்று! ஓர விழிப் பார்வைகளின் தாக்குதல் அவனது பண்புக் கோட்டையைத் தூளாக்கி விடும் போலிருந்தது! அதைவிட்டு நகன்றான்! கொஞ்ச தூரம் சென்றான்! ஊருக்குப் புதியவன்—இது என்ன பட்டினமா—"தம்புச் செட்டித் தெரு, லிங்கிச் செட்டித்தெரு" என்று சுற்றிவர! குபேரர்கள் வாழும் அமெரிக்கா அல்லவா! திக்கு, திசைதெரியாமல் அப்படியே திகைத்து நின்று விட்டான்! 'கூடவந்த நண்பர்களையும் பிரிந்து விட்டோமே—யாரைக் கேட்பது, எப்படிக் கேட்பது, கேட்டால் கேலி செய்வார்களோ' என்று மனக்கிலேசமடைந்து நின்று கொண்டிருந்தான்!

இவன் நிற்கிற தோரணையையும், ஸ்டைலையும் பார்த்து விட்டு—'இவன் ஊருக்குப் புதியவன் போலும்!' என்று எண்ணி 'யூ வாண்ட் எனி ஹெல்ப்?' என்று அவனைப் பார்த்து ஒரு பெண்மணி கேட்டாள்! பெண்ணின் உதவியை நாடுவது பேதமை என்று எண்ணினான் போலும்! "நோ, நோ" என்று பதில் சொல்லி விட்டான் அவள் கொஞ்ச தூரம் சென்றவுடன் "என்ன தப்பு செய்து விட்டோம்?" என்று வருத்தப் பட்டுக் கொண்டான்! சிறிது நேரத்திற்கெல்லாம் மீண்டும் ஒரு பெண்மணி வந்தாள். "இவனையாவது விசாரித்துப் பார்க்கலாமே" என எண்ணினான். அதற்குள் அவளே "டூ யூவாண்ட் எனி ஹெல்ப்" என்று கேட்டு விட்டாள்!" "எஸ்! ஐ வாண்ட் எ ஹோட்டல்" என்று பதில் சொன்னான்!

'ஓ! நீங்கள் மெட்ராசா?" என்றாள் அவள்!

திகிலும், திகைப்பும் கொண்டு "ஆமாம் உங்களுக்கு எப்படித் தெரியும்" என்று கேட்டான்!

"ஆளைப் பார்த்தால் தெரியாதா" என்று கேட்டாள அவள்!

'அதெப்படித் தெரிய முடியும்? நானும் உங்களைப்போல் தான் உடை அணிந்திருக்கிறேன்" என்றான் அவன்!

"அப்படின்னு நீங்கள் கௌனு போட்டிருக்கிங்க" என்று அவன் கிண்டல் செய்தான்!

"நோ, நோ! அதைச்சொல்லவில்லை நான்! உங்கள் நாட்டு மனிதரைப்போல் தானே உடை அணிந்திருக்கிறேன்" என்றான் அவன்!

'உங்கள் நாடு என்றால்......" அவளுடைய மெல்லிய உதட்டில் புன்னகை அரும்பி தவழ்ந்துக் கொண்டிருந்தது!

"இது கூடவா தெரியவில்லை! உங்கள் நாடு என்றால் அமெரிக்கா என்றுதான சொல்லுகிறேன்!"

"ஓகோ! அப்படியா? எங்கள் நாடு அமெரிகா அல்ல! உங்கள் நாடுதான்!" அவள் முன்பைவிட கொஞ்சம் அதிகமாகவே கிண்டல் செய்துவிட்டாள்!

"அப்படின்னு. நீங்களும்..."

"ஆமாம், ஆமாம்! அப்படின்னு நாங்களும் சென்னைதான்!" பெண்களுக்கு குறும்பு இல்லாவிட்டால் அவர்களுக்கு அழகு தான் ஏது!

"நீங்கள்......" எதையோ கேட்க வாயெடுத்தான்!

"அதெல்லாம் அப்புறமா பேசிக்கலாம்" அவனுடைய வாயை அடைத்துவிட்டாள்!

"அப்படின்னு அப்புறமும் என்னை பாப்பிங்களா?" எதற்கு அச்சாரமோ இந்தக் கேள்வி!

"அப்படின்னு பார்க்கக் கூடாது என்கிறிங்களா?" அவனுடைய உள்ளமும் கொஞ்சம் மகிழத்தான் செய்தது!

"நோ, நோ! அப்படியெல்லாம் சொல்லலே! தப்பா நெனைச்சிக்காதிங்க" எங்கே அதிர்ஷ்டம் போய் விடுமோ என்று கொஞ்சம் பயந்தான்!

இருவரும் ஒரு டாக்ஸியில் ஏறினார்கள! பெரும் பெரும் கட்டிடங்களை இரு மருங்கிலும் நிறுத்தி அழகுப் பார்த்துக் கொண்டிருக்கும். நீண்ட பெரும் சாலைகள் வழியே டாக்சி சென்று கொண்டிருந்தது! "இதுதான் ஜனாதிபதியின் மாளிகை, இதுதான் ஆப்பிரகாம்லிங்கன் குடியிருந்த வீடு, இதுதான் அணுஆராய்ச்சி நிலையம். இதுதான இரும்புத் தொழிற்சாலை" என்று ஒவ்வொன்றாகக் கைபை நீட்டி நீட்டிக் காட்டிக் கொண்டே சென்றான்! ஒரு பத்து நிமிடத்திற்கெல்லாம் ஒரு பெரிய தோட்டத்திற்குள் டாக்சி நுழைந்தது! சிகப்பு, பச்சை, மஞ்சள், ஊதா, வெள்ளை நீலம் எல்லா வண்ணக் கலவைகளையும் அள்ளித் தெளித்தாற் போல் பல வண்ணங்களில் பூத்துக் கிடந்த மலர்கள் அவனுடைய மனதை ரம்மியமாக்கிற்று! அதன் நடுவே மிகப் பிரமாண்டமான மாளிகை ஒன்றிருந்தது!

"இது...'! வாயைத் திறந்தான் அவன்! "ஹோட்டல் ஹேப்பிஸ்" என்றாள் அவள்!

இருவரும் உள்ளே நுழைந்தார்கள்! ஒரு பத்து நிமிடம் வரை அப்படியே நின்று கொண்டிருந்தாள்!

"ஏன் நின்று கொண்டே இருக்கவேண்டும்! போகலாமே" என்றாள் அவள்!

"நாம் நடந்து சென்றால் அடுத்தயுகத்தில் தான் நம்முடைய ரூமுக்கு போக முடியும்" என்றான் அவன்!

"என்னை என்ன பட்டிக் காட்டான் என்று நினைச்சிங்க" என்றான் அவன்!

"ஆமாம், ஆமாம்" என்று சொல்லிக் கொண்டே ஒரு பித்தானை அழுத்தினாள்! ஒரு லிப்ட்டு கீழ இறங்கி வந்தது அதிலே இருவரும் ஏறிக்கொண்டார்கள்! ஒத்தொன்பது மாடிகளைக் கடந்து இருபதாவது மாடித்தளத்தில் லிப்ட்டு நின்றது! இருவரும் இறங்கினார்கள்!

இருவரும் ஒரு அறைக்குள் சென்றார்கள்! ராஜனுக்கு ஒரே திகைப்பு! அவன் இதுவரை பார்த்தறியாத சோபாக்கள், அவன் இதுவரைக் கண்டிராத ரத்தினக்கம்பளங்கள் விரிக்கப் பட்ட கட்டில், அவன் இதுவரை கண்டிராத மேஜைகள், நாற்காலிகள்! அவன் இதுவரை பார்த்திராத அழகு ஓவியங்கள் வரையப்பட்ட நிலைக்கண்ணாடிகள்! சுவரைத் தொட்டுப் பார்த்தான்—அவனுடைய கையிலிருந்த அழுக்கு அந்த சுவற்றை கறைபாயவைத்தது! "ஐயாம் சாரி" என்று சொல்லிக் கொண்டே தன்னுடைய கைக்குட்டையால் அந்த அழுக்கை துடைக்க ஆரம்பித்தான்! அது முன்பைவிட

மேலும் அமுக்கையே உண்டாக்கிற்று! "பரவாயில்லை, பரவாயில்லை" என்று சொல்லிக் கொண்டே ஒரு வெல்வெட் துணியை எடுத்துவந்து சுத்தம் செய்தாள்! அந்தச்சுவர் சண்ணை போலாயிற்று! ராஜனுக்கு ஒரே சந்தேகம்! 'யார் இவள்? ராஜாத்திமகள் ராஜாத்திக்குக் கூட இந்த வசதி இருக்காதே" என்று எண்ணி மனத்திரையிலே சிந்தனை என்னும் ஓவியத்தை திரையிட்டுப் பார்க்க ஆரம்பித்தான்!

"ஐயாம் சாரி! உங்களை நீண்ட நேரம் காக்க வைத்து விட்டேன்! இப்படி உட்காருங்கள்" என்றாள் அவள்!

'பரவாயில்ல, பரவாயில்லை" என்றான் அவன்!

"பரவாயில்லையாவது! சும்மா உட்காருங்கள்" என்றாள் அவள்!

அவன் அந்த சோபாவில் உட்காருவதற்கே நடுங்கினான்!

"பாய் பாய்!" காலிங்பெல்லை அடித்து பையனைக் கூப்பிட்டாள்! பையனும் ஓடி வந்து அவள் முன்பு நின்றான்!

"காபி" என்றாள்! அடுத்த விநாடியே பையன் காப்பியோடு வந்து நின்றான்! அவரிடம் கொடுடா" என்றாள்! பையனும் காப்பியை ராஜனிடம் கொடுத்தான்!

பையனைப் பார்த்து "அவர் யார் தெரியுமா? அவர் தான் இனி உனக்கு எஜமான்" என்று ராஜனை பையனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்!

"எஜமானா? "ராஜன் திடுக்கிட்டான்!

"ஏன்? எஜமானாக இருக்கக் கூடாதா? "என்றாள் அவள்!

"வயிறு பிழைக்கவந்தவனைப் போய் எஜமான் என்று சொல்லுகிறீர்களே! என்னை என்ன கிண்டலா செய்கிறீர்கள்"? ராஜன் கொஞ்சம் வருத்தத்தோடுதான் சொன்னான்!

"பிழைக்க வந்திருக்கிங்களா? ஐயோபாவம்!"

பிழைக்க அமெரிக்காதானா கிடைத்தது! " அவள் உண்மையிலே அவனை கிண்டல் தான் செய்தாள்!

"எங்கிருந்தால் என்ன? வயிற்றைக் கழுவினாசரி" என்றான் அவன்!

"அப்படியா? ஏய் பையா! கொஞ்சம் தண்ணீர் எடுத்துவா -ஐயா வயிற்றை சுத்தமா கழுவிக்கிட்டும்" "அவள் சிரித்துக் கொண்டே சொன்னது அவனுக்கு வேதனையை அளித்தது!

"என்னம்மா! என்னைப் பார்த்தா பரிகாசமா இருக்கா" என்றான் அவன்!

"உங்களைப் பார்த்தா பரிகாசமா இல்லை, நெனைச்சாதானிருக்கு!" என்று மீண்டும் அவள் கிண்டல் செய்தாள்!

'ஆமாம்! ஏழைங்களைப் பார்த்தா உங்களுக்குப் பரிகாசமாதானிருக்கும் "ராஜன் கண் கலங்கச் சொன்னான்!

"உங்களுக்கு என்ன வேண்டியிருக்கு ஏழைப் பணக்காரனைப் பற்றி நெனைக்க-வயிற்றைக் கழுவினால் சரிதானே! "என்றாள் அவள்!

"உண்மைதானம்மா! இந்த காலத்தில் வயிற்றைக் கழுவினால் போதாதா?" ராஜன் மிக்க அனுபவசாலியைப் போல் பேசினான்!

"ஆமாம், ஆமாம்! சோம்பேறிங்களுக்கு வயிறு மட்டும் தான் தெரியும்! வாழ்க்கைத் தெரியாது, வாழ்க்கையின் இன்பதுன்பம் தெரியாது, நல்ல வளம் தெரியாது. நல்ல சுகம் தெரியாது, "உலகத்தில் கிடைக்கும் எல்லாவற்றையும் மனிதன் அனுபவிக்கவே பிறந்திருக்கிறான்" என்ற உண்மையும் தெரியாது!" அவள் ஒரு பெரும் உபதேசத்தையே செய்ய ஆரம்பித்து விட்டாள்.

"ஏழைகளுக்கு வாழ்வேது, வளமேது, இந்த உலகத்தில் தான் வேலையேது?" ராஜன் மெத்த வருத்தத்தோடு தான் கூறினான்!

'அப்படி என்றால் புறப்படுங்களேன்?' அந்தப் பெண் வெந்தப் புண்ணில் வேலைப் பாய்ச்சினாள்!

"எங்கேயம்மா புறப்படச் சொல்லுறீங்க" ராஜன் கொஞ்சம் திகைப்போடு தான் கேட்டான்!

"பொருள் இல்லாதவருக்கு இவ்வுலகமில்லையல்லவா?' அந்தப் பெண்மணி பாதியோடு பேச்சை நிறுத்தினாள்!

"ஓஹோ, அவ்வுலகத்திற்கு போகச் சொல்லுகிறீங்களா? அதுதான் எங்களுக்கெல்லாம் கதி" ராஜன் அழாக்குறையாக இதைச் சொன்னான்!

"ரெடி சார்!' பையன் இப்படி குரல் கொடுத்தான்!

"என்னடா ரெடி" ராஜன் பையனைப் பார்த்துக் கேட்டான்!

"ஹாட் வாட்டர் சார்" பையன் தன் காரியத்தை சரியாக முடித்து வைத்திருந்தான்!

இவள் யாராக இருப்பாள்! முன்பின் அறியாத ஒரு ஆளை அழைத்து வந்து இத்தனை உபசாரம் செய்யக் காரணம் என்ன? சென்னை என்கிறாள். ஆனால் அவளுக்கு இந்த பண்பு எப்படி வந்தது? தமிழர்கள் மறந்துவிட்ட பண்பை அவள் கடைபிடிக்கத் தொடங்கிவிட்டாளா? அல்லது அமெரிக்காவிற்கு வந்து இந்த பண்பைக் கற்றுக் கொண்டு விட்டாளா?

பண்பாவது மண்ணாங்கட்டியாவது! ஒரு ஆண் மகனை பெண் உபசரிப்பதும், அன்புள்ளம் காட்டி வரவேற்பதும்—அதேபோல் ஒரு பெண்ணை ஒரு ஆண் மகன் உபசரிப்பதும், நேசிப்பதும் பரிவு காட்டி பாசம் கொள்வதும் இயற்கையிலேயே ஏற்பட்டு விட்ட ஒரு சர்வசாதாரண விஷயமாகும்! பெண் என்றால் ஆணுக்கும், ஆண் என்றால் பெண்ணுக்கும் எந்த காரணத்தாலோ ஒருபாச இழை பின்னப்பட்டு விடுகிறது! அந்த பாசம் உறவு முறையை மட்டும் கொண்டு ஏற்பட்டு விடுவதல்ல ஆனால் ஏதோ ஒரு கவர்ச்சி இருவரிடமும் இருப்பதாக ஒருவருக்கு ஒருவர் உணர்கின்றனர்!

அண்ணன், தம்பிகளுக்கு இருக்கிற பாசத்தைவிட அண்ணன், தங்கைகளிடம் இருக்கிற பாசம், உண்டாகிற நேசம் கொஞ்சம் வலிவானது கொஞ்சம் அதிகப் பிடிப்புள்ளது!

அக்கா, தங்கைகளிடையே உள்ள பாசத்தைவிட—அக்கா, தம்பிகளிடையே உள்ள பாசம் கொஞ்சம் நேசமானதுதான்! இந்த உலகமே அப்படித்தான்!

ராஜன், இப்படி யெல்லாம் தத்துவ விளக்கத்தை தன்இதய ஏட்டிலே தீட்டிக் கொண்டிருந்தான்!

"சார்! குளித்தாகி விட்டதா? அம்மா கூப்பிடறாங்க" என்றான் பையன்!

அப்போது தான். அவன் குளிக்க வந்த விஷயம் அவனுக்கே ஞாபகத்திற்கு வந்தது! மளமளவென்று தண்ணீரைக் கொட்டிக் கொள்ள ஆரம்பித்தான்!

(தொடரும்)

(12ம் பக்கத் தொடர்ச்சி)

சபை கட்சியா? அவரும் காந்தி மகாத்மாவின் சிஷ்யர்தானே?

அதையடுத்து அஸ்சாம் மாநிலத்திலும் ஒரு பெரும் பிளவு ஏற்பட்டிருக்கிறது! மொழிச் சிக்கலை தீர்க்க முடியாமல் திண்டாடும் காரணத்தால் அஸ்சாம் மாநிலத்து முதலமைச்சர் கனம் பி. பி. சாலியா அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டிய நிலை பிறந்திருக்கிறது! ஒரு பகுதியைச் சார்ந்தவர்கள் அஸ்சாம் மொழியை எதிர்க்கின்றனர்! ஒரு பகுதியைச் சார்ந்தவர்கள் அஸ்சாம் மொழி ஆட்சி மொழியாவதை ஆதரிக்கின்றனர்! இந்த நிலையில் ஏக பாரதம் எங்கே? ஒரே மொழிக் கொள்கை எங்கே? மதிப்பிற்குரிய நமது முதலமைச்சர் கனம் காமராஜர் இதற்கு என்ன பதில் சொல்ல இருக்கிறார்!

இதைப் போலவே பைசூரிலும் தடியடி நடைபெற்றிருக்கிறது!

பாண்டிச்சேரி காங்கிரஸ் பெரும், பெரும் மோசடிகளுக்கு உடந்தையாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது! தங்கம் கடத்துவது முதல், பஸ்பர்மிட் தருவது வரையில் செய்த மோசடியை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை!

இப்படி எங்கு பார்த்தாலும்—இமயம் முதல் கன்னியா குமரி வரையில் காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளந்து கிடக்கின்றது!

காங்கிரஸ் கட்சியைப்பற்றி நினைத்துப்பார்த்தாலே மிகமிக கேவலமாக இருக்கிறது! சந்தி சிரிக்குது, சவமேனம் கொட்டுது! இந்த இலட்சணத்தில் தான் காமராஜர் நம்மிடம் பிளவை எதிர்பார்த்து—'திராவிட முன்னேற்றக் கழகம் நாலு நாட்களில் அழிந்து விடும்" என்ற வீருப்புப் பேசி இருக்கிறார்! என்ன வேண்டியிருக்கிறது வீருப்பு என்றுதான் புரியவில்லை!

உ. பி. மாநிலத்தில் கலகம், அஸ்சாமில் குழப்பம், ஆந்திரத் அடிதடி, பாண்டிச் சேரியில் கள்ளக் கடத்தல், பெரு மோசடி! இந்த இலட்சணத்தில் கட்சி என்ன வேண்டியிருக்கிறது!

கதர்சட்டை என்ன வேண்டி இருக்கிறது! கதர் குல்லாய் என்ன வேண்டி இருக்கிறது!

கட்சியைக் கலைத்துவிட்டு, சம்பாதித்து வைத்துள்ள பணத்தை வைத்துக்கொண்டு நிம்மதியாகக் காலத்தைக் கழிப்பதுதான் இனி நல்ல வழியாகும்! இல்லாவிட்டால் வருகிற தேர்தலுக்குள் காங்கிரஸ் கட்சி மூன்றாக, நானாகாக பிளந்து அழிந்துபோகும் இது திண்ணம்! இது உறுதி!

அழியப்போகும் காங்கிரஸ் கட்சியை காமராஜர் நினைத்தாலும், அவரது பக்கத்திலே உள்ள கோவைச் சீமான் நினைத்தாலும், போலீஸ் மந்திரி பக்தவத்சலம் நினைத்தாலும், அல்லது கக்கன்ஜீ அவர்களே நினைத்தாலும் காப்பாற்ற முடியாது; முடியாது.



தமிழர்கள் தமிழ்நாட்டில் பிழைக்க வழி இல்லை!

கள்ளத் தோணியில் சென்று கடலில் பிணமாகுகிறார்கள்!

சட்ட மன்றத்தில் இதுபற்றிப் பேச வாய்ப்பு இல்லை!

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ளெல்லாம் கேட்டிருப்பீர்கள். இந்த நிலை ஏன் ஏற்படுகிறது. அந்த நிலையை நீக்க இங்குள்ள ஆட்சியாளர்கள் என்ன செய்தார்கள்.

இந்த சம்பவத்தைக் குறித்து சட்டமன்றத்தில் நானும், நமது அருமை நண்பர் ஏ, கோவிந்தசாமி அவர்களும் சேர்ந்து ஒரு அவசரத் தீர்மானம் கொடுத்து பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டோம். ஆனால் எங்களுக்கு அந்த வாய்பபு மறுக்கப்பட்டது.

ஏன் மறுக்கப்பட்டது? அந்த வாய்ப்பு ஏன் எங்களுக்குக் கொடுக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அந்த மாதிரி கேள்விகள் கேட்டுவிட்டால், அது மக்களிடம் செல்வாக்குப் பெற்று விடுமென்ற எண்ணத்தாலா? அல்லது இன்னும் அதிகமாக வளர்ந்து விடும், காங்கிரசின் செல்வாக்கு குறைந்துவிடுமென்ற எண்ணத்தாலா? இதிலிருந்து காங்கிரசின் போக்கை நன்கு அறிந்து கொள்ளலாம்.

நமது மாநில முதலமைச்சர் காமராசர் திராவிட முன்னேற்ற கழகத்தின் மீது பழி சுமத்தும் வகையில், மக்கள் தவருக எண்ணும் வகையில், மக்கள் மத்தியில் பொய்யுரைகளைப் பேசி வருகிருர், மக்களிடம் முன்னேற்றக் கழகத்திற்கு இருந்து வரும் செல்வாக்கையும், அன்பையும், ஆதரவையும் தனது பேச்சால் குறைத்து விடலாம் என எண்ணியே அவ்வாறு தவருன கருத்துக்களைப் பேசி வருகிருர்

முதலமைச்சர் காமராசர் படிக்காத மக்களும், பாமரர்களும் வாழுகின்ற இடங்களிலும், அரசியல் அறிவு குறைவாக இருக்கின்ற பகுதிகளிலும் குக்கிராமங்களிலுமே சென்று பொய்யுரைகளைக் கூறி வருகிருர்.

ஏழை மக்களின் கல்வி வசதிக்காகவும், அவர்கள் இலவசமாக கல்வி அறிவு பெறுவதற்காகவும் 10 ஆயிரம்கோடி ரூபாய்திட்டம் வகுத்ததகாவும், அதை முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்டுகளும் எதிர்த்ததாகவும், வேண்டாமென்று கூறியதாகவும் பேசி வருகிருர்.

இவர் எப்போது 10 ஆயிரம் கோடி ரூபாய் திட்டம் போட்டார். நாங்கள் எப்போது வேண்டாமென்று எதிர்த்தோம்

நாங்கள் ஏழைமக்கள் படிப்பதையா எதிர்ப்போம், கம்யூனிஸ்ட்டுக் கட்சியும், முன்னேற்றக் கழகமும் நாட்டிலுள்ள மக்கள் படிக்க வேண்டுமென்பதில் என்றும் எதிர்ப்புத் தெரிவித்ததில்லையே.

காமராசர் மீது நாம் குறை கூறுவதுகூட அவர் அதில் அக்கரை செலுத்தவில்லை என்பதில் தானே இந்தமாதிரி ஒரு அமைச்சர் அபாண்டமான பொய்யைப் பேசுவது சரியா?

இவரா 10 ஆயிரம் கோடி திட்டம் தீட்டினர், இவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறதா? இவரல்ல 10 ஆயிரம்கோடி திட்டம் தீட்டியது, இவரது தாத்தா டில்லிக்காரன்தான் திட்டம் தீட்டினன்.

அந்தத் திட்டம் சென்னைக்கல்ல அது இந்தியத் துணைக் கண்டம் முழுவதற்கும் சேர்த்து தான் 10 ஆயிரம்கோடிரூபாய்த் திட்டம் தீட்டப்படடது சென்னைக்கு 398 கோடி ரூபாய்கள் தான் ஒதுக்கப்பட்டது.

இதைத்தான் நமது அண்ணு அவர்கள் எதிர்த்தார்கள். 1000 கோடி ரூபாய் சென்னைக்கு ஒதுக்க வேண்டுமென்று கூறினர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தணடுத் திட்டத்திலும் சென்னை மாநிலம் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறது. மூன்ருவது திட்டத்திலாவது அதிகதொகை ஒதுக்க வேண்டுமென்று அறிஞர் அண்ணு அவர்கள் கூறினர்கள் இந்த மாநிலத்திலிருக்கும் அமைச்சர்கள் பதவிதான் பெரிதென எண்ணியுள்ளார்கள், இன்று பதவி வரும், நாளை பதவி போகும் பதவி என்றும் நிலைத்திருப்பதல்ல. ஆகவே அமைச்சர்கள் நாட்டின், நாட்டு மக்களின் நன்மைகளைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட வேண்டும்.

நமது அண்ணு அவர்கள் சென்னை மாநிலத்திற்கு 1000 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று கூறியபோது ஒன்றும் பதில் கூருது மௌனமாக இருந்தார்கள். ஆனல் செங்கற்பட்டில் போய் நிதியமைச்சர் சுப்பிரமணியம் நரகல் நடையில் பேசியதுடன், அண்ணு அவர்களைப் பண்டாரம் என்றும் கூறினர். அதற்கு அண்ணு அவர்கள் சட்டமன்றத்தில் நிதியமைச்சர் முன்னிலையில் கூறினர்.

"நான் கேட்கும் பண்டாரம் நிதியமைச்சர் தர முடியாத பண்டாரம்" என்ருர். நிதியமைச்சர் பதில் கூற முடியாது தவித்தார்.

நமது அண்ணு அவர்கள் 1000 கோடி ரூபாய் கேட்டதற்கு "பண்டாரம் என்று நிதியமைச்சர் கூறினர், ஆனல், சர்க்காரால் நியமிக்கப்பட்ட லோகநாதன் குழு சென்னை மாநில அபிவிருத்திக்கு 2000 கோடி ஒதுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறது. நான் நிதி அமைச்சரைக் கேட்டேன். "அன்று அண்ணு 1000 கோடி. ஒதுக்க வேண்டுமென்று கூறியதற்கு பண்டாரம் என்றீர்களே இன்று லோகநாதன் குழுவை என்ன சொல்வீர்கள். "இரட்டைப் பண்டாரம்" என்பீர்களா?" என்று.

இதற்கு எந்தவித பதிலும் நிதியமைச்சர் கூறவில்லை.

இன்று அமைச்சர்களும், காங்கிரஸ்கார்ரர்களும் நம்மையும் நமது கழகத்தையும் அழித்துவிட பலவிதமான தந்திரத்திலும். தரங்கெட்ட செய

(12ம் பக்கம் பார்க்க)



சின்னஞ்சிறு நாடுகளெல்லாம் உலக அரங்கில் இருக்கின்றபோது

திராவிடநாடு மட்டும் ஏன் இருக்க முடியாது?

அகில இந்தியாவெங்கும் நம் கொடி பறக்க வேண்டுமென்பது நமது ஆசை அல்ல!

இழந்த உரிமையை மீண்டும் பெறுவதே கழகத்தின் முக்கிய இலட்சியம்!

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன. எப்படியும் எங்கெந்த வேலைகளில் ஈடுபட்டாகிலும் முன்னேற்றக் கழகத்தை ஒழிக்கவேண்டும் என்று முனைந்து விட்டார்கள், கூட்டங்களில் கலகம் செய்வது கழகக் கட்டிடங்களைத் தாக்குவது, கொடிகளை எரிப்பது, தலைவர்களின் படங்களை உடைப்பது, கழகத் தோழர்களைத் தாக்குவது போன்ற இழிவான காரியங்களில் இறங்கி இருக்கிறார்கள். ஏழுகிணறு, சூளை,' பெரம்பூர் போன்ற இடங்களில் பகிரங்கமாகவே கலகவேலைகளில் ஈடுபட்டு விட்டார்கள். சைதாப்பேட்டையில் வலிய வம்புக்கிழுத்து கழகத்தைச் சேர்ந்தவர்களைத் தாக்கும் செய்கையில் இறங்கப்பார்க்கிறார்கள்.

குன்றத்தூரில் நமது கழகத் தோழர் சம்பந்தத்தைத் தாக்கி இருக்கிறார்கள். குடந்தையில் இராமலிங்கத்தைத் தாக்கிக் கொன்றிருக்கிறார்கள், கோவையில் ஆரோக்கியசாமியை வெட்டிக் கொன்றார்கள், இப்படியெல்லாம் செய்வதாலேயே கழகம் அழிந்து விடுமா? அழித்துவிடத்தான் முடியுமா? இனி எப்படிச் செய்தாலும் எந்த வகையைக் கையாண்டாலும் முன்னேற்றக் கழகத்தை—அதன் வளர்ச்சியை, செல்வாக்கை எவராலும் அழிக்க முடியாது. அது ஒரு விடுதலை இயக்கம். அதன் பணியை, அதன் சேவையை மக்கள் உணர்ந்துவிட்டார்கள், விரும்பி விட்டார்கள்.

எதை எதையோ கையாண்டு பார்த்து நமது கழகத்தையும், நம்மையும் ஒழிக்கப் பார்க்கும் காங்கிரஸ்காரர்கள், பத்திரிகைகளிலே பொய்ச் செய்திகளைப் பிரசுரித்து மக்களின் மனதைக் குழப்பி அவர்களைத் திருப்பிவிடலாம் என எண்ணுகிறார்கள். காமராசரின் ஆதரவாலும், காங்கிரஸ்காரர்களின் பணத்தாலும் பல லட்சாதிபதிகளின் பொருளாலும் காங்கிரசைப் பலப்படுத்துவதற்கென்றே ஒரு தினப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது! அதன் ஆசிரியருக்கு தன் பேனாவை பொய் சொல்வதற்கென்றே உபயோகப் படுத்துகிறவர் அவர் பெயரைக் கூறி என் நாவைக் களங்கப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை அப்படிப்பட்டவர் நடத்தும் பத்திரிகையில் அப்பட்டமான பொய்ச்செய்தியை இரண்டு தினங்களுக்குமுன் வெளியிட்டிருக்கிறது. அந்தப் பத்திரிகை ஆசிரியரின் பொய் சொல்லும் திறமை—காங்கிரசை வளர்ப்பதற்காக அவர் கையாளும் தரக்குறைவு இவைகளை மக்கள் உணர வேண்டுமென்பதற்காகவே இதைக்கூறுகிறேன்.

சென்னை நகரில் சூளைப் பகுதியில் உள்ள வாடியா நகரிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து 100 - உறுப்பினர்கள் பிரிந்து காங்கிரசில் சேர்ந்துவிட்டதாக அந்த காங்கிரஸ் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது!

அந்தச் செய்தியில் அந்த ஆசிரியர் வெளியிட்டிருக்கிறார் ‘முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பிடிக்காததாலும், அதில் சுயநலவாதிகள் அதிகம் பேர் இருப்பதாலும், அதிலுள்ளவர்களின் போக்குப் பிடிக்காததாலும் 100 பேர்கள் விலகிவிட்டார்கள்’’ என்பதாகும்.

பிரிந்தவர்கள் நேராக காங்கிரஸ் கமிட்டிக்குச் சென்று ‘‘அய்யனே, மெய்யனே, ஆபத்பாந்தவனே, அனாதை ரட்சகா, திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்தோம், அது எங்களுக்குப் பிடிக்கவில்லை அங்குள்ளவர்களெல்லாம் சுயநலவாதிகள், நீங்களெல்லாம் பொதுநலவாதிகள் நாங்கள் உங்களுடன் சேருகிறோம்; எங்களை ஆட்கொள்ளுங்கள், காங்கிரசில் சேர்த்து எங்களைப் புனிதப்படுத்துங்கள்’ என்று கெஞ்சியதாகவும், காங்கிரசில் சேர்ந்துகொண்டதாகவும் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இந்தச் செய்தியைப் பார்த்தும் நான் மாவட்டச் செயலாளர் திரு. மணிவண்ணனிடமும், தலைமைக் கழகத்தினிடமும் தொடர்பு கொண்டு விசாரித்தேன். அந்தச் செய்தியே பொய்யானது. கழகத்தின் கட்டுப்பாட்டிற்கு அடங்காத சுப்பிரமணியம் என்ற ஒருவர் கழகத்தை விட்டு விலக்கப்பட்டாரென்றும், அவரைச் சேர்ந்த கழக உறுப்பினர் இருவரை தள்ளி வைக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி கிடைத்தது.

அந்த வட்டத்துக் கிளையில் 186 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதிலிருந்து ஒருவரும் விலகவில்லை. இப்படி இருக்கும்போது அப்பட்டமான பொய்யை தவறான செய்தியை பத்திரிகையில் வெளியிட்டு தன்னுடைய நிலையையே தாழ்த்திக் கொள்கிறார் அதன் ஆசிரியர். இம்மாதிரியெல்லாம் செய்திகளை வெளியிட்டுவிட்டால் மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தி விடலாம் என்றும் நினைக்கிறார்கள்.

இந்தப் பத்திரிகை காமராசரின் தயவால் நடக்கிறது. காங்கிரசின் பணத்தாலும், ஆதரவாலும் நடக்கிறது. வரும் ஒன்றரை ஆண்டில் எத்தனைப் பொய்ச் செய்திகளை வெளியிட்டாகிலும் கழகத்தை அழித்துவிடலாமென்று அந்த ஆசிரியர் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார். அதனால்தான் அடுத்தடுத்து அந்தப் பத்திரிகை பொய்ச் செய்தியை வெளியிட்டு தன்னைப் புளுகுணியார் என்பதை நிரூபித்து வருகிறார்.

அதே பத்திரிகை ஒரு தலையங்கம் எழுதி இருக்கிறது. ‘‘அரோகரா’’ என்று தலைப்பு இட்டு எழுதியுள்ள அந்த தலையங்கத்தில் சமீபத்தில் நடந்த பொதுக் குழுவில், தோழர் என். வி. நடராசன் தனது கருத்தைத் தெரிவித்துப் பேசும்போது, ‘‘திராவி— நாட்டுக் கொள்கையை விட்டுவிட்டு கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து காங்கிரசை எதிர்க்க வேண்டும்’’ என்று கூறியதாக அந்தப் பத்திரிகை எழுதியிருக்கிறது. காமராசரின் பத்திரிகையான அது, நடவாத ஒன்றை—பேசாத ஒன்றை அப்பட்டமாகப் பொய்யாக வெளியிட்டிருக்கிறது.

அன்று பொதுக் குழுவில் திரு. என். வி. நடராசன் பேசவே இல்லை. அறிஞர் அண்ணா, நாவலர், சம்பத், நான், மற்ற தோழர்கள் பேசினோம். அன்று அந்த விஷயம் பற்றி யாரும் பேசவே இல்லை. திராவிடநாட்டுக் கொள்கையை தோழர் என். வி. நடராசன் வேண்டாம் என்று கூறுகிறார் என்று யாராவது கூறினால் அவர்களைக் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்குத்தான் அனுப்ப வேண்டும். திரு. நடராசன் திராவிடநாட்டு பிரிவினைக் கொள்கையில் திடநம்பிக்கை உடையவர். அப்படி இருக்கும்போது, இம்மாதிரிப் பொய் செய்தியை வெளியிட்டுப் பிழைக்கிறாயே வெட்கமில்லை, அதுவும் காமராசர் பத்திரிகை என்று கூறிக் கொள்கிறாயே மானமில்லை, இப்படி அப்பட்டமான பொய் சொல்லிப் பிழைப்பதைவிட நாக்கை பிடுங்கி செத்து விடுவதே மேல்! ஒரு முழக் கயிறு எடுத்து தூக்கு மாட்டிச் சாவதே மேல்! பொய் உரைத்தாலும் பொருந்தும்படியாக உரைக்க வேண்டும், அப்படி இல்லாது தரக் குறைவான முறையில்,— இழிவாக— ஆபாசமாக பொய் பேசுவதால் தன்னையே, தானே தாழ்த்திக் கொள்வதாகுமே யன்றி, நம்மை ஒன்றும செய்து விட முடியாது.

இந்த மாதிரியான மஞ்சள் பத்திரிகையைக் கொண்டு மக்களை ஏமாற்றவும், மக்களிடம் அப்பட்டமான பொய்யைக் கூறி, மாசு, மறு ஏற்படுத்தவும் நினைத்தால் அது ஒன்றும் வெற்றியைக் கொடுக்காது. அதனால் கழகம் அழிந்து விடாது. அது ஊனப்பட்டு விடாது, அதற்கு மாறாக வளர்கிறது. உயர்கிறது எங்கும் பரவுகிறது. தாக்கத் தாக்க—தங்கமாளிகை ஆகிறது. எஃகு உள்ளம் பெற்று பலமான முறையில் நாட்டில் வீரநடை போடுகிறது.

ஆகவே, இந்த மாதிரி பொய் செய்திகளைக் கண்டு கலக்க

(10ம் பக்கம் பார்க்க)

10 கோடி ரூபாய் திட்டம் தீட்டியது காமராசரல்ல, இவரது தாத்தா டில்லிக்காரன் தீட்டினான் !

(முன் பக்கத் தொடர்ச்சி)

மடையாகிர்கள். கழகத் தோழர்கள்—நண்பர்கள் இம்மாதிரி செய்திகள் வந்தால் தலைமைக் கழகத்தினிடமோ பொறுப்புள்ளவர்களிடமோ கலந்து மக்களிடம் உண்மை செய்திகள் பரவும் வகைகளைச் செய்ய வேண்டும். பொதுமக்களுக்கு உண்மையை எடுத்துரைக்க வேண்டும் இம்மாதிரி நாம் செய்தால் இந்த மாதிரி பொய்யாளர்கள் நீண்ட நாட்களுக்கு வாழமாட்டார்கள்.

நாம் அடைய வேண்டிய இலட்சியம் பெரியது. நம்முடைய போராட்டம் லேசானது அல்ல. அதற்காக நாம் கவனம் செலுத்த வேண்டும். நமது உயர் இலட்சியம் அடைவதற்காக நாம் கண்ணுங் கருத்துமாகப் பாடுபட வேண்டும்.

இன்று உலக அரங்கில் பல நாடுகள் விடுதலை முழக்கம் செய்து வருகிறது.

இன்று நைஜீரியா என்ற சின்னஞ் சிறு நாடு விடுதலைபெற்று சுதந்தரமாக இருக்கிறது. அங்கு விடிவெள்ளி தோன்றி சுதந்தர முழக்கம் செய்து வருகிறது.

ஐ. நா. சபையில் அந்த நாடு அங்கம் பெற்று மற்ற நாடுகளுடன் சமமாக இருக்கிறது.

அதே போன்றுதான் இன்றும் பாவும் விளம்பரம் பெற்று வருகிறார், காங்கோ நாடு ஒரு சின்னஞ் சிறிய நாடு அதுவும் விடுதலை பெற்று விட்டது.

அதுபோன்றுதான் ஆப்பிரிக்கா நாட்டிலுள்ள கருப்பா நாடும் விடுதலை பெற்று உலக நாடுகளுடன் சரிசமமாக இருக்கிறது. அவைகளெல்லாம் இன்று விடுதலை முழக்கம் செய்யும்போது நாம் விடுதலை பெறமுடியாதா? நாம் உலக அரங்கில் சமமாக இருக்க முடியாதா?

விடுதலை பெற்ற நைஜீரியா நாட்டிற்கு இந்தியாவின் பிரதமர் நேரு வாழ்த்துச் செய்தி அனுப்புகிறார். மூன்றரை லட்சம் மக்களைக் கொண்ட நைஜீரியா விடுதலை அடைந்திருக்கும் போது எட்டரைக் கோடி மக்களைக் கொண்ட திராவிடநாடு விடுதலை அடையக் கூடாதா? விடுதலை அடைய முடியாதா? அடிமையாகத்தான் இருக்க வேண்டுமா? இங்கு விடுதலை விடிவெள்ளி தோன்றாதா? திராவிடநாடு விடுதலை அடைந்து சுதந்திரமாக இருப்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் போராடி வருகிறது.

நமது மாநில முதலமைச்சர் காமராசரும். பக்தவத்சலமும் நமது விடுதலைக் கோரிக்கையை கேலி செய்கிறார்கள்... கிண்டல் செய்கிறார்கள்.

சின்னஞ் சிறுநாடுகள் பிரிந்தால் வாழ முடியாது. அதற்குப் பாதுகாப்புகள் கிடைக்காது என்று கூறுகிறார்கள்.

மந்திரி கக்கன் சொல்லுகிறார் சின்னஞ்சிறு நாடுகளுக்கு உலக அரங்கில் அந்தஸ்து இருக்காது என்று கூறுகிறார்.

உலகத்திலேயே பெரிய நாடுகளாக விளங்கும் ரஷ்யாவின் தலைவர் குருசேவ், அமெரிக்காவின் தலைவரான ஐசனோவர் போன்றவர்கள் இருக்கும் உலக நாடுகள் சபையில் சின்னஞ்சிறு நாடுகள் இருந்து எவ்வளவு பெரிய அந்தஸ்திலும், எவ்வளவு பெரியமதிப்பிலும் இருந்து வருகிறதென்பதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம்.

இந்தியாவின் தலைவர் நேரு கலந்திருக்கும் ஐ. நா. சபையில் சிறிய நாடுகள் எந்தவித அந்தஸ்தில் இருந்து வருகிறது என்பதை இன்றைய தினம் எப்படி உலக அரங்கில் வாழ்கிறது என்பதை இந்த அமைச்சர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பலம் பொருந்திய பெரியநாடுகள் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகளின் சபைக்குத் தலைவராக இருக்கிறார் என்பது தெரியுமா? எந்தநாட்டுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை அறிந்திருக்கிறார்களா? ‘போலண்டு’ என்ற அயர்லாந்து நாட்டுத் தலைவருக்கு அந்தப் பதவி கிடைத்திருக்கிறது. எப்படி அந்த சின்னஞ்சிறு நாட்டிற்குக் கிடைத்தது. அப்படி அந்த சிறிய நாடான ஐயர்லாந்துக்கு அந்த அந்தஸ்து கிடைக்கும் போது திராவிடக் கூட்டாட்சிப் பிரதிநிதிக்குக் கிடைக்காதா? யோக்கியமானவர்கள் நாணயமானவர்கள் நல்ல மனதுடன் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் “திராவிடநாடு திராவிடர்க்கே” என்று கூறுகிறோம் அப்படிக் கூறுவதால் என்ன தீமை வந்து விடும், அதனால் என்ன கேடு வந்து விடும். நாம் கூறுவதைப் புரியாதவர்கள்—தெரியாதவர்கள் நம்மை கேலியும், கிண்டலும் செய்கிறார்கள்.

நமது அண்ணா அவர்களோ, நாவலர் அவர்களோ என்ன சொல்லுகிறார்கள். மண்வெட்டி எடுத்து பள்ளம் தோண்டியோ, குழிவெட்டியோ அப்பால் இருப்பவர்கள் வடவர்கள், இப்பால் உள்ளவர்கள் திராவிடர்கள் என்று கூறி பிரிக்கவில்லை.

நமது அண்ணா அவர்கள் பல ஆண்டுகளாக எழுதி வருகிறார், பேசி வருகிறார், அந்த லட்சியத்தைக் கொண்டு தேர்தலில் நின்று 17 லட்சம் வாக்குகளைப்

“இதைவிடப் பெரும் பேறு எனக்கு ஏது வேறு”

★★★

இங்கு நடைபெறுகின்ற இந்தப் பாராட்டுக் கூட்டத்தைக் கண்டு உண்மையிலேயே நான் பெருமையும், பெரும் பூரிப்பையும், அளவற்ற மகிழ்ச்சியையும் அடைகிறேன்!

என்னைப் பார்க்கப் போனால் இந்தப் பாராட்டுக் கூட்டத்திற்கும் அவசியமில்லை என்று தான் எண்ண வேண்டியிருக்கிறது! இது வெறும் சம்பிரதாயத்திற்காக நடைபெறுகிறது என்று தான் நினைக்கிறேன்! அறிஞர் அண்ணா அவர்களைப் பாராட்டும் சக்தி, ஆற்றல் உண்மையிலேயே நமக்குக் கிடையாது!

இரண்டாவது தடவையாக அறிஞர் அண்ணா அவர்கள் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்! இதனால் அவருக்குப் பெருமை யொன்றுமில்லை! பொதுச் செயலாளர் பதவிக்குத்தான் பெருமையை, மேலும் புனிதத் தன்மையை ஏற்படுத்தும்!

அறிஞர் அண்ணா அவர்களை பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்ததைக் குறித்து உண்மையிலேயே நான் பெருமையடைகிறேன்! இதைவிட பெருமை இந்த உலகத்தில் எனக்கு வேறு எதுவுமே கிடையாது! இதைவிட எனக்கு பெருமைதரும், மகிழ்ச்சியூட்டும் சம்பவம் எனக்கு என்ன நடைபெறப் போகிறது!

இந்த நேரத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைப்பற்றி என் மனம் எண்ணி எண்ணிப்பார்த்து பூரிப்படைகிறது!

நான் பிறந்த கோவை மாவட்டத்திலுள்ள ஒரு தொகுதியில் நான் தேர்தலில் போட்டியிட்டபோது நான் என்ன சொல்லி மக்களிடம் ஓட்டுகளைக் கேட்டேன்? நான சீமான் என்றோ, பூமான் என்றோ, அதைச்செய்வேன், இதைச் செய்வேன்” என்றோ ஓட்டுகளைக் கேட்கவில்லை! நான் அச்சிட்டு மக்களுக்கு விநியோகம் செய்த அந்த அச்சுத்தாளின் உள்ள வாசகங்களைப் பற்றி இன்று நினைத்தாலும் எனக்கு அது பேரின்பமாகவே இருக்கும்!

உங்கள் ஊரைச்சார்ந்தவன், விடுதலை இயக்கத்திற்கு மாணவர்த்தலைவனாக இருப்பவன், அத்தோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற பொதுச் செயலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் கீழ் துணைப் பொதுச் செயலாளராக பணிபுரிபவன் என்று தான் நான் என்னை அறிமுகம் செய்து கொண்டேன், இதைவிட என்ன தான் தகுதி வேண்டும் என்று அன்றைய தினம் நான் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தேன்!

நேற்றையதினத்திலிருந்து நான் இரண்டாவது தடவையாக அவரது அரவணைப்பலிருந்து பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்! இதைவிட அந்தஸ்து, இதைவிட எனக்கு பெரும் பேறு இந்த உலகத்தில் என்ன தான் இருக்கிறது!

மதியழகன்

வெங்கட்ராமன் கேட்பவராகவும், ராஜ்பகதூர் கொடுப்பவராகவும் இருக்கும் நிலை மாறவேண்டும்!

நமக்குத் தேவையானதை நாமே செய்யும் உரிமை இருக்க வேண்டும்

அதற்காகவே கழகம் போராடுகிறது

பெற்ற 15 சட்ட மன்ற உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறோம். அகில இந்தியக் கூட்டுறவிலிருந்து விலகி 3 மாநிலங்களை ஒன்று சேர்த்து ஒரு கூட்டாட்சி நிறுவ வேண்டும்—ஒரு சுதந்திர திராவிடநாடு அமைக்க வேண்டும் என்று கேட்கிறோம். இதைப் புரியாது நம்மைப்பற்றி விஷமப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்

பலர் நம்மைப்பற்றிக் கூறும்போது "திராவிட முன்னேற்றக் கழகம் அகில இந்தியமுறையில் இல்லை. மாநில அளவில் இருக்கிறது. அதற்கு மற்ற மாநிலங்களில் செல்வாக்கில்லை என்று கூறுகிறார்கள்.

கம்யூனிஸ்ட்டு கட்சி, காங்கிரஸ் கட்சி, பிரஜா சோசலிஸ்ட் கட்சி போன்றவைகள் அகில இந்திய முறையில் பாடுபடுகிறது. அந்த முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. அந்த முறையில் இருந்தால்தான் காங்கிரசை எதிர்க்க முடியும். அகில இந்தியாவில் தொடர்பு இருந்தால்தான் தேர்தலில் ஈடுபட்டு பாராளுமன்றத்தை—பல மாநில சட்டமன்றங்களைக் கைபபற்றி காங்கிரசைத் தோற்கடிக்க முடியும்" என்று கூறுகிறார்கள்.

இப்படிப் பலர் கூறுகிறார்கள் இதை வைத்துக் கொண்டு நம்மைப் பலர் கேள்வி கேட்கிறார்கள்.

இந்தக் கேள்விகளில் நீதியும், நேர்மையும் இல்லை. இதற்குப் எப்படி பதில் கூறுவது? உங்களுக்கு விளக்கம் பெறுவதற்காக இங்கு அதுபற்றிக் கூற விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆதிக்கம் செலுத்த—அரசைக் கைப்பற்ற நினைக்கும் கழகமல்ல. ஆட்சி பீடத்தில் அமர ஆசை கொண்டிருக்கும் ஒரு கழகமல்ல.

முன்னேற்றக் கழகம் ஒரு விடுதலை இயக்கம். தான்பிறந்த பொன்னாட்டை, தாய்த் திருநாட்டை, தான் வாழும் மண்ணை விடுதலை யடையப் பாடுபடும் தேசிய இயக்கமாகும்.

ஆட்சியில் இருக்கவேண்டியது நேருவா? அண்ணாவா? நேரு ஒழியவேண்டும், அண்ணா வர வேண்டும் என்ற நோக்கத்துடன் பாடுபடும் ஒரு அதிகார ஆதிக்க வெறிகொண்ட இயக்கமல்ல நமது கழகம்.

காமராசரோ, கக்கனோ, பக்தவத்சலமோ, சுப்பிரமணியமோ ஆட்சி பீடத்திலிருப்பதை நாம் எதிர்க்கவில்லை. நாம் எதிர்ப்பதெல்லாம் டில்லிக்குக் காவடி தூக்குவதை, நாம் எதிர்ப்பது எல்லாம டில்லியிலுள்ளவர்களிடம் கெஞ்சுவதைதான். வடநாட்டிலெல்லாம் அதாவது வங்கத்தில் பம்பாயில், பஞ்சாப்பில், அசாமில், காஷ்மீரில் நமது கழகக்.கொடி பறக்க வேண்டுமென்பதல்ல நமது எண்ணம்.

பாராளுமன்றம் நம் கையில்—நமது அண்ணாவிடத்தில் இருக்க வேண்டுமென்று நாம் ஆசைப்படவில்லை.

நம்நாடு வடவர் ஆதிக்கத்திலிருக்கக் கூடாது, நம்முடைய உரிமைகள், நமது பிரச்சினைகள் வடநாட்டார் பிடியிலிருக்கக் கூடாது என்பதற்காகப் பாடுபடுவதுதான் நமது பணி.

நாம் தூய்மையான—களங்கமற்ற முறையில் பாடுபடுகிறோம். இதை உணராது, உணர்ந்தும், வேண்டுமென்றே நம்மைப்பற்றி தவறான முறையில் பேசுபவர்களைப்பற்றி நாம் என்ன நினைப்பது?

நான் சமீபத்தில் நடந்த ஒரு விஷயத்தைக் கூற ஆசைப்படுகிறேன்.

மத்திய சர்க்காரின் அமைச்சர் ராஜ் பகதூர் என்பவர் துறைமுகத்தின் புதிய கட்டிடத்தைத் திறக்க வந்தார்.

அப்போது நமது மாநில தொழிற் துறை அமைச்சர் திரு வெங்கட்டராமன் அவர்கள் பேசினார். அவர் என்ன பேசினார். சற்று சிந்தித்துப் பாருங்கள்.

"நான் என்னுடைய அலுவலகத்திலிருந்து ஜன்னல் வழியாகப் பார்க்கும்போது, கடலில் 4–5 கப்பல்கள் நிற்பதற்கு இடமில்லாது கடலின் மத்தியில் நிற்கிறது. சாமான்கள் இறக்க முடியாது மிகவும் கஷ்டப்பட வேண்டியதாயிருக்கிறது. தூத்துக்குடி துறைமுகத்தை அகலப்படுத்தி அதைப் புதுப்பித்தால் அங்கும் கப்பல்கள் அனுப்பி சாமான்களை இறக்க வழி செய்தால் இந்த மாநிலத்தில் தொழில் வளரும், வியாபாரம் வளர்ச்சியடையும் இதற்கு வழிசெய்ய வேண்டும்" என்று மந்திரி வெங்கிட்டராமன் கேட்டார்.

இதற்கு டில்லி அமைச்சர் ராஜ்பகதூர் என்ன பதில் கூறினார்.

"சென்னை துறைமுகத்தில் கப்பல்கள் நிற்க முடியாமல் தவிப்பதற்கு வருந்துவதாகவும், பரிபப படுவதாகவும், தொழிற் வளர்ச்சி குறைவதற்கு வருந்துகிறேன். விரைவில் தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்துகிறேன்" என்று கூறினாரா?

இல்லை. பின் என்ன கூறினார்?

"உங்கள் துறைமுகத்தில் கப்பல்கள் நிற்க முடியாது. பல கப்பல்கள் கடலின் மத்தியில் நிற்கிறதா? இவ்வளவு வியாபாரப் பெருக்கம் நீங்கள் பெற்றிருப்பதற்கு மகிழ்ச்சியடைகிறேன், வாழ்த்துகிறேன்" என்று மட்டும் கூறினார். வேறு ஒன்றும் கூறவில்லை.

மந்திரி வெங்கிட்டராமன் பேசாது இருந்து விட்டார்.

அதே இடத்தில் துறைமுக இலாகாத் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது "4000 டன் எடையுள்ள இருப்புக்கனி பொருள்கள் இருப்பதாகவும், அதைப் பயன்படுத்துவதற்கு புதிய ரயில்கள் தேவை என்றார்" அதற்கும் டில்லி அமைச்சர் பதில் பேசவில்லை.

இந்த நிலை கூடாதென்றுதான் நமது கழகமும், நாமும் கூறுகிறோம்.

வெங்கிட்டராமன் கேட்பவராகவும், டில்லி மந்திரி ராஜ்பகதூர் கொடுப்பவராகவும இருக்கக் கூடாது,

நாம் ஒருவரிடமும் பிச்சை கேட்கும் நிலை உண்டாகக் கூடாது. அந்தநிலை இருப்பதைப் போக்க வேண்டும் என்றுதான் நாம் கூறுகிறோம்.

திருவோடு ஏந்தும் நிலையையும் காவடி தூக்கும் நிலையையும் மாற்ற வேணடும் என்றுதான் நமது கழகம் கூறி வருகிறது. அதற்காகத்தான் பாடுபட்டு வருகிறது.

நமக்குத் தேவையானதை நாமே பூர்த்தி செய்வதற்கான வலிவும, திறமையும், திராணியும் நமக்கு இருக்கவேண்டுமென்று நாம் கூறி வருகிறோம். அந்த வாய்ப்பு நமக்கு இருக்க வேண்டுமென்றும் சொல்லி வருகிறோம். இன்று நிலை என்ன? நம்முடைய உரிமைகள் எல்லாம் வடநாட்டானிடம் ஒப்புவித்திருக்கிறோம். அவனைக் கேட்டுத்தான் நாம் எதையும் செய்ய முடியும்,

நமது தமிழகத்தில் வாழும் தமிழ் மக்கள் இன்று தன்மானத்துடன் வாழ முடியவில்லை வேலை கிடைக்காது திண்டாடுகிறார்கள். பசியாலும், பட்டினியாலும் வாடும் தங்கள் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்ற வழியின்றி அண்டை நாடுகளுக்குப் போவதற்கு எண்ணுகிறார்கள். அங்கு போவதற்கும் வகையின்றிச் செத்து மடிகிறார்கள். சமீபத்தில் கள்ளத் தோணி மூலமாக இலங்கைச் செல்ல நினைத்த தமிழர்களின் கதியை நீங்க

(8ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON
Regd. No. M. 7074 MALAIMANI விலை 16 காசு வெளிநாடு 20 சதம் Phone 83285

இமயம் முதல் குமரி வரையில் காங்கிரஸ் கட்சியில் பெரும் பிளவு !

அகில பாரதமெங்கும் இரட்டைக் குழந்தைகள் தோற்றம் !

சந்தி சிரிக்குது ! சவ மேளம் கொட்டுது !

ஆந்திரத்தில் தடியடி, அஸ்ஸாமில் பெருங் கலகம், உ. பி. மாநிலத்தில் மண்டைகள் உடைகின்றன ; பாண்டிச்சேரியில் கள்ளக் கடத்தல் !

காமராஜரின் வீருப்போ துளியும் குறையவில்லை !

நமது பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் கனம் காமராஜர் கொஞ்ச நாட்களாக நாட்டின் நடப்பையும், நிலையையும் புரிந்து கொள்ளாமலேயே—நம்மை எப்படி அழிப்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்படி ஒழிப்பது என்ற சிந்தனையிலேயே காலத்தைக் கழித்து நம் மீது வசை புராணம் பாடி வருகிறார் !

நாட்டைப் பற்றி அவர் நினைப்பதைவிட நாட்டு மக்களைப்பற்றி அவர் நினைப்பதைவிட ஆட்சியைப் பற்றி நினைப்பதைவிட, ஆட்சியிலுள்ள ஊழல்களைப்பற்றி நினைப்பதைவிட, நாடெங்கும் நடைபெறும் அநியாய கொள்ளைகளைப் பற்றி அவர் நினைப்பதைவிட, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி அவர் நினைப்பது தான் அதிகமாகும் ! சதா திராவிட முன்னேற்றக் கழகம்—சதா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய நினைப்பு, சதா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைப் பற்றிய கவலை !

சோதிடம் பார்த்தார், ஜாதகம் கணித்தார் ! மூன்று நாள் என்றனர் சிலர் !—“இல்லை இல்லை; நான்கு நாட்கள்” எனறனர் பலர்! அரசியல் ஜோஸ்யர்கள் சொன்னதை நம்பி நமக்கு ஆயுளைக் கணித்துக் கணக்குப் போட ஆரம்பித்தார் ! இதைத் தெருவெங்கும் முழங்கினர்! “சிட்டுக் குருவி சிட்டுக் குருவி சேதி தெரியுமா ?” என்று பாட்டுக்கூட பாட ஆரம்பித்தார் !

“பொதுச் செயலாளர் பதவிக்குச் சிண்டு பிடிச் சண்டை நடக்கிறது! கோட்டைக்குள்ளே ஒரே குத்து வெட்டு! ஒரே குழப்பம்! ஒரே கொந்தளிப்பு! இனி தாங்காது அந்தக் கட்சி! இனி உயிர் வாழாது !” என்று முழக்கம் செய்து வந்தார் நமது மதிப்பிற்குரிய பெரிய அமைச்சர் காமராசர்!

“காமராசரை அரசியலிலே புலி என்று வருணித்தார்கள்! தந்திரத்திலே நரி என்றும் சொன்னார்கள்! மணலைக் கயிருகத் திரிப்பார், வானத்தை வில்லாக வளைப்பார், முக்கடல் தண்ணீரையும் மூழ்கி, மூழ்கிக் குடிப்பார்; மாமலையைத் தூக்குவார், மத யானையை அடக்குவார் ! இறந்த காலத்தை நினைப்பார்—அதனால் நிகழ்காலத்தை உணர்வார், பிறகு வருங்காலத்தைக் கணிப்பார் ! முக்காலத்தையும் அறிந்த முனிவர், எங்கள் முதல்வர் !” என்றெல்லாம் காங்கிரஸ் மகா வீரர்கள் துதி பாடி வந்தனர் !

அந்த காமராஜர் — ஆச்சாரியாரை விரட்டி விரட்டியடித்த அந்த காமராஜர்—ஆக்கவும், அழிக்கவும் படைக்கவும், காக்கவும் வல்லமை பெற்ற அந்த காமராஜர், அண்ணாவைக் கண்டவுடன், அண்ணாவின் திறமையைப் பார்த்தவுடன், அண்ணாவின் ஆற்றலை உணர்ந்தவுடன் அப்படியே மிரண்டுவிட்டார் ! அப்படியே திகைத்துவிட்டார் ! வீராதி வீரர் வாளைக் கீழே போட்டார், சூராதி சூரர் தலை சுற்றி உட்கார்ந்தார் !

இதுவும் என்ன காங்கிரஸ் கட்சியா ? பதவிக்காகவும், பர்மிட்டுக்காகவும், சொந்த சுகபோக வாழ்க்கைக்காகவும் உயிர் வாழும் கட்சியா ? சிறந்தக் கொள்கைக்காக தோற்றுவிக்கப்பட்ட கட்சியாகும். இதற்கா அற்ப ஆயுள் என்றுகூறினீர்கள்? இதற்கா ஆருடம் கணித்தீர்கள் ?

சந்தி சிரிக்கும் என்று சொன்னீர்கள்! நீங்களே முச்சந்தியில் நின்றுகொண்டு ஒருவரோடு ஒருவர் சண்டைப் பிடித்துக் கொண்டு, தெருவீதியிலே கடந்து புரளுகிறீர்கள்!

ஆந்திரத்து காங்கிரஸ் கட்சியிலே இரண்டு கோஷ்டி! ஆளுபவர்கள் ஒரு கோஷ்டி—ஆள வாய்ப்பில்லாது போனவர்கள் ஒரு கோஷ்டி ! இரண்டு கோஷ்டிகளும் சிலம்பு விளையாட்டு, கத்திச் சண்டை, குத்துச் சண்டை! இதைத் தீர்த்து வைக்க நமது காமராஜர்கூட சென்றார் ! அவர்களுக்குக் காமராஜரைப் பற்றித் தெரியாதா? நீ மட்டும் என்ன ஒழுங்கு ! ஆச்சாரியாரை விரட்டியடித்து விட்டு பதவியை கெட்டியாகப் பிடித்துக் கொண்ட நீ தானே” என்று எவரும் கேட்காவிட்டாலும், மனதிலாவது நினைக்கத் தான் செய்வார்கள் !

அதைபடுத்து உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஒரு பெரும் கலகம், பிளவு, கொந்தளிப்பு உண்டாகி இருக்கிறது! உத்தரப் பிரதேச முதலமைச்சர் கனம் சம்பூர்ணானந்த் அவர்களால் நிறுத்தி வைக்கப்பட்ட ஒருவரை, முதலமைச்சருக்கு நேர் விரோதியான திரு. சந்திர பானு குப்தா முறிபடித்து காங்கிரஸ் தலைவராக வெற்றிவாகை சூடி இருக்கிறார். அந்த மாநிலத்து அமைச்சர் ராஜிநாமா செய்யவேண்டிய பரிதாப நிலைக்கும் வந்துவிட்டார்! ஒரே கட்சி என்கிறீர்கள் ! ஒரே தலைவர் என்கிறீர்கள், ஒரே சட்டை என்கிறீர்கள், ஒரே குல்லாய் என்கிறீர்கள்! உங்களுக்குள்ளேயே ஏன் சிண்டு பிடிச் சண்டை வரவேண்டும்! சந்தர பானு குப்தா கம்யூனிஸ்ட் கட்சியா ? அல்லது இந்து மகா

(7ம் பக்கம் பார்க்க)

திருத்தம்

இந்த இதழ் 10ம் பக்கத்தில் போடப்பட்டிருக்கும் ஒரு தலைப்பில் “10 கோடி ரூபாய் திட்டம்” என்றிருப்பதை 10 ஆயிரம் கோடி திட்டம் என்று திருத்தி படிக்குமாறு கோருகிறோம்.

—ஆ-ர்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

விலும் இறங்கி இருக்கிறார்கள். நாம் அதை யெல்லாம் முறியடிக்க வேண்டும்.

அடுத்து வரும் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக, காங்கிரசின் எதிர்ப்பை சமாளிப்பதற்காக தேர்தல் நிதி சேர்க்க வேண்டும். நமது அண்ணா அவர்கள் கூறியபடி உண்டியல் வைத்து நிதி சேர்த்து இன்றுள்ள ஏகாதிபத்தியத்தை—சாவாதிகாரத்தை அகற்றி, ஜனநாயகம் நிலவ வகை செய்யும்படி கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14